| | |
|---|---|
| SUBJECT | CBI GIVES CLEAN CHIT TO VGN IN GUINDY PROPERTY CASE |
| PUBLICATION | DINA MALAR |
| DATE OF ISSUE | 08.05.2019 |
| PAGE NO | 5 |

# வி.ஜி.என்.,னுக்கு எதிரான குற்றச்சாட்டு ஆதாரமில்லை என சி.பி.ஐ., அறிக்கை

**சென்னை, மே 8–**

'மத்திய அரசுக்கு, 115 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக, வி.ஜி.என்., கட்டுமான நிறுவனம் மற்றும் வங்கி அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு உரிய ஆதாரங்கள் இல்லை' என, சென்னை, சிறப்பு நீதிமன்றத்தில், சி.பி.ஐ., அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

அறிக்கையை ஏற்று, கைப்பற்றிய ஆவணங்களை, சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கும்படி, சி.பி.ஐ.,க்கு, சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை, கிண்டியில், 'ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர்ஸ்' நிறுவனத்தின், 10.46 ஏக்கர் நிலத்தை, வி.ஜி.என்., என்ற கட்டுமான நிறுவனம், சில வங்கிகள் வாயிலாக வாங்கியது. இதில், 1,600 வீடுகள் அடங்கிய அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தை அறிவித்தது.

நில பரிவர்த்தனையில் தவறான கணக்குகள் காட்டப்பட்டதால், மத்திய அரசுக்கு, 115 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக, வி.ஜி.என்., நிறுவனம் மற்றும் கர்நாடகா, தெலுங்கானாவில் உள்ள, பாரத ஸ்டேட் வங்கியின் உயர் அதிகாரிகளுக்கு எதிராக, சி.பி.ஐ., வழக்குப் பதிவு செய்தது.

இதையடுத்து, புலன் விசாரணைக்கு பின், சி.பி.ஐ., தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை:

சதி, மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக, சட்டப்படியான நடவடிக்கையை தொடர, போதிய ஆதாரம் இல்லை.

மத்திய அரசுக்கு, 115 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தவும், போதிய ஆதாரம் இல்லை.

எனவே, இந்த அறிக்கையை ஏற்று, வழக்கை முடித்து வைக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்களிடம் ஆவணங்களை ஒப்படைக்கவும், உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஆவணங்களையும், சி.பி.ஐ.,யின் அறிக்கையையும், சி.பி.ஐ., சிறப்பு நீதிமன்ற நீதிபதி, எஸ்.ஜவகர் பரிசீலித்தார்.

அறிக்கையை ஏற்று, ஆவணங்களை சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கும்படி, சி.பி.ஐ.,க்கு உத்தரவிட்டார்.